அடங்கியிருக்கலாமோ உன்ர விண் தோள்கள் ..

Written by தமிழரங்கம்
Monday, 08 April 2013 12:46 - Last Updated Friday, 29 November 2013 08:33

குறுக்குக்கட்டோட விறுக்கென்று

மணலில் எட்டி நடக்கின்ற மீன்காரப் பெண்டு

குனிந்து மீன்கூடை இறக்கி வைக்கயில்

மொய்க்கிற ஈயோடு அவளுடல் மேயும் உன் கண்கள்

கிழிசல்கள் பொத்தி முழுமேனி மறைக்காத

சீலை முகிலுக்குள் அவள் நிலவெனக் காண்பாய்

உன் புத்தி மயங்கியே வீணாய் அவள் பொழுதைப்பறிக்க

போகாதா அறாவிலை கேட்டு மெல்ல உரசியே பார்ப்பாய்

1 / 2

அடங்கியிருக்கலாமோ உன்ர விண் தோள்கள்..

Written by தமிழரங்கம்
Monday, 08 April 2013 12:46 - Last Updated Friday, 29 November 2013 08:33

செருப்பில்லாக் கால்கள் சீவாத கருங்கூந்தல் ாயம் பூசாத சொணடுகள் ஆனால் வண்டுக கண்கள் உடுக்கை அடித்தாலும் அகலாத பேயாக ன் மனசுக்குள் குடிகொண்ட நடையாள் சப்பாத்துக் காலோடு சிகரெட்டும் கையுமாய் வெளிநாட்டால் வந்து சம்மாட்டி வாங்குவான் மீன்கள் அவன் உன்ன வைப்பாட்டியாக்க வலம் வந்தான் என்கையில் கத்தியிருந்ததில்லை அப்ப தேப்பனைத் திண்ட பிள்ளையளோட ாலியறுத்தவள் தாரத்தை திண்டவள் தன்னந்னியாக மீனவித்தோ சீவியம் செய்வாள்? அவளின்ர வீட்டுப்படலைல வீச்சுவலையோட காட்டினர் பலவான்கள் தம் காதல் வித்தை! மொண்டானும் கையில இல்ல பொறுக்கியள் தலையில போட. வெறும கருவாட்டு விலையில்ல உன்ர காதல்! கோதாரி விழுவார் கொள்ளையில போவார் உண்ணாணப் பிள்ளையள் வயிறாரத் தினனாத கொடுமைய நண்டுப் பொறிக்குள்ளே இரையாக வைத்தார். பசிக்கண்ணீரைப் பெட்டைமேனிக்கு பன்னீராய்க் காடாத்தச் சொன்னார். சூள் மீன்பிடிக்க வாள் விசுக்கின கையள் கட்டுமரங்கட்டி அலையத் துளைச்சு நுரையை ஆகாசம் வீசி அளந்த கண்கள் அடங்கியிருக்கலாமோ உன்ர விண் தோள்கள்..

2 / 2